
**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் பொது நூலக இயக்ககம்.**



# 28 இடம் பொருள் கலைஞர்









# பொது நூலக இயக்ககம்

## "அண்ணாவின் கனவு – செயல்படுத்திய தம்பி!"

'எல்லோருக்கும் எல்லாமும்' என்று சமதர்ம, சமூகநீதிக் கொள்கை முழங்கிய திராவிட இயக்கம் மக்களின் அடிப்படைத் தேவைகளை எல்லாம் பொதுவானது என்றது. அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகப் பகுத்தறிவும், கல்வி அறிவும் அவசியம் என்பதை, திராவிடம் பேசிய தலைவர்கள் மக்களுக்கு உணர வைத்தனர். அதற்காக கல்விக் கூடங்களையும், நூலகங்களையும் ஊர்தோறும் உருவாக்கும் முனைப்பு அவர்களிடம் இருந்தது. அந்த முயற்சிகளில் இருந்து உருவான அறிவுப் புரட்சிதான் தமிழ்நாட்டின் வளர்ச்சியை உறுதி செய்தது.

திராவிட இயக்கம் முன்னெடுத்த அந்த அறிவுப் புரட்சியை, பொது நூலக இயக்ககம் என்கிற பெயரில் 1972-ஆம் ஆண்டில் முறைப்படுத்தியவர் முத்தமிழறிஞர் கலைஞர். "தமிழ்நாட்டின் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு நூலகம் அமைய வேண்டும், அந்த அளவுக்கு அறிவுச் சமூகமாக, நாம் வளரவேண்டும்" என்றார் கலைஞரின் அண்ணன் பேரறிஞர் அண்ணா. ஊர்தோறும் நூலகம் அமைத்து, அவரது சிந்தனைக்கு உயிர் கொடுத்தார் அண்ணாவின் அன்புத் தம்பி கலைஞர்.

அந்த அறிவியக்கத்தின் சமீபத்திய அடையாளம்தான் அவரது நூற்றாண்டில், அவரது பெயரிலேயே ஒரு மாபெரும் நூலகம் மதுரையில் அமைந்தது.

### நூலக இயக்கக் கட்டமைப்பு

தமிழ்நாட்டில் நூலகங்களை முறைப்படுத்தும் வகையில், 'மதராஸ் மாகாண பொது நூலகங்கள் சட்டம்' 1948-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அப்போது நூலகங்களின் எண்ணிக்கை அதிக அளவில் இல்லை. படிப்பகங்கள்தான் அதிகமாக இருந்தன. அந்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு 'பொது நூலக இயக்ககம்' உருவாக்கப்பட்டது. அதன் மூலம் ஏற்கெனவே செயல்பட்டு வந்த **'கன்னிமாரா', சரஸ்வதி மகால்** போன்ற நூலகங்களை மேம்படுத்தியதுடன், கிராமங்கள் தோறும் நூலக இயக்கத்தைக் கொண்டு செல்லும் பணிகள் முறைப்படுத்தப் பட்டன.

> **"புத்தகத்தில் உலகைப் படித்தால் அறிவு செழிக்கும்... உலகத்தையே புத்தகமாய்ப் படித்தால் அனுபவம் தழைக்கும்."**

"புத்தகத்தில் உலகைப் படித்தால் அறிவு செழிக்கும்... உலகத்தையே புத்தகமாய்ப் படித்தால் அனுபவம் தழைக்கும்" என்று சொல்லிய முத்தமிழறிஞர் கலைஞர், கிராமம் தோறும், அங்குள்ள மக்கள்தொகையைப் பொறுத்து பகுதிநேர, முழுநேர, ஊர்ப்புற நூலகங்களையும் மாவட்டத்திற்கு ஒரு தலைமை நூலகத்தையும் திறக்க வழி காட்டினார். இதன் மூலம் அந்தந்த கிராம ஊராட்சிகளின் முயற்சியில் பொது நூலக இயக்ககத்தின் வழிகாட்டுதலில் நூலகம் அமைக்கும் முயற்சிகள் தமிழ்நாடு முழுக்க முன்னெடுக்கப்பட்டன.

### இதனை இவன் முடிப்பான்

தமிழ்நாடு பொது நூலக இயக்ககம் தொடங்கப்பட்டபோது, அதன் முதல் இயக்குநராக வே.தி என்று அழைக்கப்படும் வே.தில்லைநாயகம் நியமிக்கப்பட்டார். நூலகத் துறையில் நிபுணத்துவம் பெற்றிருந்த இவர், கன்னிமரா நூலகத்தின் நூலகராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். அவரை அடையாளம் கண்டு பொது நூலக இயக்ககத்தின் முதல் இயக்குநராக நியமித்தார் கலைஞர்.

1972-ஆம் ஆண்டு ஜூலை மாதம் தொடங்கி 1982-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை 10 ஆண்டுகள் இயக்குநராக வே.தி பொறுப்பு வகித்தார். ஒரே துறையில் தொடர்ந்து 10 ஆண்டுகள் இயக்குநராக இருந்து நூலகங்களை வளர்த்தெடுத்தவர்.

### நூலக எண்ணிக்கை

பொது நூலகங்களை ஊக்குவிப்பதில், பிற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாடு முன்னணியில் இருக்கிறது. குஜராத், ராஜஸ்தான், அருணாச்சலப் பிரதேசம் போன்ற மாநிலங்கள் பொது நூலகத்தை நிர்வகிப்பதற்கான நூலகச் சட்டங்களையே 21-ஆம் நூற்றாண்டில்தான் உருவாக்கியிருக்கின்றன. மேலும், சமீபத்தில் வெளியான புள்ளிவிவரம் ஒன்று, கர்நாடக மற்றும் கேரளாவுக்கு அடுத்த இடத்தில் 4,600 க்கும் மேற்பட்ட நூலகங்களுடன், அதிகப் பொது நூலகங்களைக் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு உள்ளதாகத் தெரிவிக்கிறது. அதற்குப் பொது நூலக இயக்ககமே மூலமுதற்காரணம்.

751 பகுதி நேர நூலகங்கள், 1915 ஊர்ப்புற நூலகங்கள், 14 நடமாடும் நூலகங்கள், 1612 கிளை நூலகங்கள், 314 முழு நேரக் கிளை நூலகங்கள், 32 மாவட்ட மைய நூலகங்கள் என்று கீழிருந்து மேலாகக் கோபுரம்போல் எழுப்பப்பட்டிருக்கிறது தமிழ்நாட்டு நூலகக் கட்டமைப்பு. இந்தப் பெரும் கட்டமைப்பின் உச்ச நட்சத்திரமென கன்னிமாரா நூலகம் இருந்தது.

2010-ஆம் ஆண்டில் முதலமைச்சராக இருந்த கலைஞர் நூலகப் புரட்சியின் மற்றொரு மைல் கல்லாக, அண்ணா நூற்றாண்டு நூலகத்தைத் தமிழ்நாட்டுக்கு அர்ப்பணித்தார். இப்போது திராவிட மாடல் ஆட்சியில் அதன் வரலாற்றுத் தொடர்ச்சியாக 'கலைஞர் நூற்றாண்டு நூலகம்' எழுந்து நிற்கிறது. இதற்கெல்லாம் அச்சாணியாக இருக்கிறது பொது நூலக இயக்ககம்.

### நூலகம் உருவாக்கம்

பொதுச் சுகாதார நிலையங்கள் , கல்விக்கூடங்கள், போக்குவரத்துக்கு வசதி, மின்சாரம், குடிநீர் போன்ற அடிப்படைத் தேவைகளில் கவனம் செலுத்தியது மட்டுமின்றி, மக்களின் அறிவாற்றலை மேம்படுத்தும் நோக்கத்தில் ஏற்படுத்தப்பட்ட பொது நூலகங்களுக்குப் பின்னணியிலும் கலைஞர் என்ற ஜனநாயகவாதியின் பெரும் பங்கு இருந்துள்ளது.

ஒரு கிராமத்தில் பொது நூலகம் கொண்டுவர வேண்டுமானால், மூன்று புரவலர்களையும் இருநூறு உறுப்பினர்களையும் நூலகத்தில் சேர்க்க வேண்டும். அந்தப் பட்டியல் மாவட்ட நூலக ஆணைக்குழுவுக்குக் கிடைத்ததும், புதிய நூலகம் ஒன்று உருவாக்கப்படுகிறது. முதலில் தற்காலிகக் கட்டடத்திலும், பிறகு கிராம ஊராட்சியிடம் இடம் வாங்கப்பட்டு, நிரந்தரக் கட்டடம் அமைக்கப்படுகிறது.

தமிழ்நாடு அரசு பொது நூலகத்துறையின் விதிகளின்படி, கிராமங்களில் முதலில் பகுதிநேர நூலகம் என்ற சோதனை முறையில்தான் பொது நூலகங்கள் தொடங்கப்படுகின்றன. அதாவது, பகுதி நேர நூலகம், ஊர்ப்புற நூலகம், கிளை நூலகம் என்ற வகையில் கிராமப்புற நூலகங்களின் வளர்ச்சியை, தமிழ்நாடு அரசு பொது நூலக இயக்ககம் கட்டமைத்திருக்கிறது. 2006-ஆம் ஆண்டில் நூலகங்களுக்கு வாங்கப்படும் நூல்களின் எண்ணிக்கையும் அதிகரித்து உத்தரவிட்டவர் கலைஞர்.

### புதிய முயற்சிகள்

தகவல், எழுத்தறிவு, கல்வி மற்றும் கலாசார மேம்பாடு எனப் பொது நூலகங்களின் குறிக்கோளை அறிந்தவர்கள் திராவிடத் தலைவர்கள். எழுத்து, பேச்சு, வாசிப்பு என வளர்ந்த இயக்கம் திமுக. நூலகக் கட்டமைப்பு இல்லாத காலத்திலேயே, படிப்பகங்களை நடத்தி அரசியல் பேசிய தலைவர்கள் அண்ணாவும், கலைஞரும். அவர்கள் கையில் ஆட்சி அதிகாரம் வந்த பின்னர்தான் வாசிப்பு இயக்கத்துக்கு உரிய அங்கீகாரம் கிடைத்தது. இப்போது மாவட்டந்தோறும் புத்தகக் கண்காட்சி, சிறைத்துறை நூலகம், இலக்கியத் திருவிழா, மின்னணு நூல்கள் காப்பகம் எனப் பொது நூலக இயக்ககம் காலமாற்றத்துக்கு ஏற்ப செயல்பட்டு வருகிறது.

புத்தகங்களைப் படிக்கக்கூடாது எனப் பிடுங்கப்பட்ட கைகளில், நூல்களைக் கொடுத்து, வாசிக்க வைத்த இயக்கம் தி.மு.கழகம். அதன் வரலாறு அறிந்தவர்கள் அண்ணாவின் கனவை, கலைஞரின் செயலை நினைத்துப் பார்த்தால், மலைப்பாக இருக்கும். அறியாதவர்கள் கைகளில் அவற்றை வாசிக்கக் கொடுப்போம்.

...வலம் வருவோம்

## கற்றலை எளிமையாக்கும் மணற்கேணி!




அனைவருக்கும் கல்வி என்பதுதான் தமிழ்நாடு அரசின் நோக்கம். அதை நடைமுறைப்படுத்துவதற்குப் பல முன்னெடுப்புகளையும், அரசு முன்னெடுத்து வருகிறது. அந்த வகையில், பள்ளி மாணவர்களின் 'கற்றலை எளிதாக்கும் மணற்கேணி' என்கிற புதிய செயலி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை மாநிலப் பாடத்திட்டத்தில் உள்ள பாடங்களை மாணவர்கள் எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையில், காணொலி வடிவங்களாக இந்தச் செயலியில் பார்க்கலாம். ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் கேள்விகள் கேட்கப்பட்டு கற்போரின் புரிதல் திறனைப் பரிசோதிக்கும் வகையிலும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் செயலியில் உள்ள காணொலிகளைக் கட்டணமின்றி பதிவிறக்கம் செய்தும் பார்த்துக் கொள்ளலாம். பொருளாதார வசதி கொண்டவர்களுக்கு மட்டுமே கிடைத்துவரும் காணொலிப் பாடங்களை அரசுப் பள்ளி மாணவர்களுக்கும் கொண்டு சேர்க்கும் வகையில் இந்தச் செயலியை உருவாக்கியுள்ளது பள்ளிக்கல்வித்துறை.

தமிழ்நாட்டில் மட்டுமல்ல, உலகின் எந்த மூலையில் இருந்தாலும், தமிழ்நாட்டுப் பாடத்திட்டத்தைப் படிக்க, புரிந்துகொள்ள இந்தச் செயலி பயன்படும். போட்டித்தேர்வு மாணவர்களும் இந்த வசதியைப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பதும் இதன் சிறப்பம்சமாகும். இந்த முயற்சியின் மூலம் தமிழ்நாட்டின் கல்வி வரலாற்றில், புதிய அத்தியாயம் எழுதப்படும் என்பது நிச்சயம்.



## :ப்ளாஷ்பேக்

### தளபதி தந்த ஊக்கம்!



சம்பத்

1993-ஆம் ஆண்டு கழகம் சந்தித்த பிளவு, கட்சிக்குள் நெருக்கடியை ஏற்படுத்தியது. அப்படியான சூழலில் 1994-இல் அன்றைய இளைஞர் அணிச் செயலாளரும் இன்றைய தலைவருமான தளபதி அவர்கள், தஞ்சை கிழக்கு மாவட்டத்தில் இரண்டு நாட்கள் சூறாவளிச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அவரது பயணம் சோர்வுற்ற கழகத் தோழர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் அமைந்தது. அதற்கு அடுத்து வந்த சட்டமன்றத் தேர்தலில் கழகம் பெருவாரியான இடங்களில் வெற்றிபெற்று, ஆட்சியைப் பிடித்தது. இது அந்த சுற்றுப்பயணத்தின்போது எடுத்துக்கொண்ட புகைப்படம்.

**-வி.ஏ.சம்பத், மாவட்டத் துணை அமைப்பாளர், அயலக அணி, நாகப்பட்டினம் தெற்கு மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. வாட்ஸ்அப் எண்: 90033–24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### மாநாட்டுப் பெருமைகள்

**1958-ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் 15 மற்றும் 16 தேதிகளில் சேலம் மாவட்ட 3-வது மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டின் தலைவராக, கலைஞர் இருந்தார். அந்த மாநாட்டில்தான் கழகம் சார்பாக முதன்முதலாக பஞ்சாயத்துத் தேர்தல்களில் பஞ்சாயத்துத் தலைவர்களை மக்களே தேர்ந்தெடுக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அரசுக்கு அனுப்பப்பட்டது. அந்தத் தீர்மானம் கலைஞர் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னரே அமலுக்கு வந்தது. அதற்கு முன்னர் நடைபெற்ற வேலூர் மாநாட்டின் தலைவராக கலைஞர் இருந்தார். இரண்டு மாநாடுகளும் மக்கள் ஆதரவிலும், சொல்லப்பட்ட கருத்துக்களிலும் பெருமைப்படத்தக்கதாக இருந்தது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 191




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.